# சூழலை அழகாக வைப்போம்.





நாங்களும்
அழகாக இருப்போம்.

அல்லாஹ் அழகை விரும்புகிறான்.

# உணவு உண்ணும்போது ஒழுக்கம் பேணுவோம்.











உணவளித்த அல்லாஹ்வுக்கு நன்றி சொல்வோம்.

பாடம் 13

## கலிமா தையிபா

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ

مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

லா இலாஹ இல்லல்லாஹ்

முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்

# எங்கள் ஈமான்

“அல்லாஹ்வைத் தவிர
வணக்கத்துக்குரிய
இறைவன் வேறில்லை.”

“முஹம்மத் ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம் அவர்கள்
அல்லாஹ்வின்
ரஸூல் ஆவார்கள்.”

அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான்

அவனே எம்மைப் படைத்தவனாம்

எல்லை இல்லாக் கருணையினால்

எம்மை என்றும் காப்பவனாம்

அவனைத் தினமும் தொழுதிடுவோம்

அவனிடம் உதவி வேண்டிடுவோம்